# ஸ்ரீலங்கு தமிழும் சைவ நெறியும்

பதிப்பாசிரியர்கள்

க. இரகுபரன்

கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

2014

நூலின் பெயர் :

மூவர் தமிழும் சைவ நெறியும்

பதிப்பாசிரியர்கள் :

க. இரகுபரன்

கலாநிதி. ஸ்ரீ. பிரசாந்தன்

முதற் பதிப்பு : 2014

வெளியீடு :

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

248, 1/1, காலி வீதி, கொழும்பு – 04,

இலங்கை.

அச்சு :

யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

48 B, புளூமெண்டால் வீதி, கொழும்பு – 13

தொ. பே. : 2330195

பக்கங்கள் : xxiv + 644

பிரதிகள் : 750

அளவு : 1/8

கடதாசி : 80 ஜி. எஸ். எம். வெள்ளைத்தாள்

விலை : ரூபா 800 /=

Title:

'Moovar Thamilum Saiva Neriyum'

Editors:

K. Raguparan

Dr. S. Pirasanthan

First Edition : 2014

Published by:

Dept. of Hindu Religious & Cultural Affairs

248, 1/1, Galle Road, Colombo - 04,

Sri Lanka.

Printers :

Unie Arts (Pvt) Ltd.,

48 B, Bloemendhal Road, Colombo 13.

Tel: 2330195

No of Pages : xxiv + 644

No of Copies : 750

Size : 1/ 8

Paper Used : 80 GSM White Paper

Price : Rs. 800 /=

ISBN 978-955-9233-33-6

# சைவ மரபில் தலயாத்திரை

## சம்பந்தர் பாடல்களினூடாக ஓர் ஆய்வு

சி. ரமணராஜா

'சைவம் சிவனுக்கு இறைமை கூறி வழிபடும் நெறியாகும். சிந்துவெளி காலத்திலிருந்து சைவ நெறியின் தொன்மைச் சிறப்பினை அறிஞர்கள் கண்டுணர்ந்து தெளிவுபடுத்தியுள்ளனர். தொன்மைச் சிறப்புடன் திகழும் சைவ சமயமானது பல்வேறு கால கட்டங்களினூடாக வளம் பெற்று வந்துள்ளது. அந்த வகையில் தமிழக வரலாற்றில், பல்லவர் காலம் சைவ சமயத்தினை மறுமலர்ச்சியுறச் செய்து சைவம் தழைத்தோங்க வழி வகுத்திருந்தது. இதனாலேயே இக்காலத்தில் தமிழகம் மனித மைய ஈர்ப்புச் சூழலில் இருந்து சமய மைய ஈர்ப்புச் சூழலுக்கு மாறத் தொடங்கியதாக சமய அறிஞர்கள் கருதுவர்.

பல்லவர் காலத்திலே அரசியல், சமயச் சூழலமைவுகள் சைவத்தையும் , தமிழையும் முற்றாகப் பாதிக்கச் செய்திருந்தன. அதாவது மாற்றம் என்பதனை வேண்டி நின்ற ஒரு காலப்பகுதியாக இக் காலப் பகுதி அமைந்திருந்தது.

இதன் அடிப்படையில் சமூகத்திலும் "சமயத்திலும் மாற்றங்கள் தேவை" என்ற தன்னுணர்ச்சியின் வெளிப்பாடாக பக்தி இயக்கம் முகிழ்ப்பு நிலை எய்தியது. அத்தகையதொரு சூழலில் தமிழினால் பக்தி செய்து, அம் மொழியினால் இறைபுகழ் பாடி பக்தி இயக்கப் பின்னணியில் புறச் சமயச் சூழலை சைவச் சூழலாக மாற்றியமைத்த வகையில் சைவ வரலாற்றில் சம்பந்தர் முதன்மைப்படுத்தப்படுகின்றார்.

பல்லவர் காலத்தில் சைவ சமய மரபுக்கும், சைவ தத்துவச் செழுமைக்கும், கலையியல் மற்றும் வாழ்வியல் முறைமைக்கும் புதிய செல்நெறிகளை அமைத்த தனிப்பெருங் கவிஞராகச் சம்பந்தர் விளங்குகிறார். "மிகு சைவத்துறை விளங்கச்"[1] செய்ய வந்தவரென்று சேக்கிழாரால் சம்பந்தர் அறிமுகம் செய்யப்படுகிறார். மேலும் சிவனடியைச் சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் ஞானப்பாலுண்ட மாத்திரத்தே சம்பந்தருக்குக் கிடைத்ததாகவும் சேக்கிழார் சுட்டிக்காட்டியுள்ளார். அடியார் கூட்டம் புடைசூழ, மகிழ்ச்சியோடும், பெருமிதத்தோடும் தமிழக ஊர்கள் தோறும் வலம் வந்த ஒருவராக சம்பந்தரை அவரது பாடல்களூடாக அறிந்துணர முடிகிறது.

இத்தகைய வெளிப்பாடுகள் சைவசமயச் செல்நெறியில் சம்பந்தரின் வகிபாகம் எத்தகையதென்பதை புலப்படுத்துவதாக அமைகின்றன.

## தலயாத்திரை

இந்துக்களின் வழிபாட்டு முறையில் மற்றுமொரு வடிவம் தலங்களை நோக்கிய புனிதப் பயணங்களாகும். திருக்கோயில்களுக்குச் சிறப்பைக் கொடுப்பன மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகையினால் இவை, முறையே அமையப் பெற்ற திருத் தலங்களை நோக்கியதாக சமயச் சான்றோரின் புனிதப் பயணங்கள் அமைந்திருந்தன. தலங்களை நோக்கிய புனிதப் பயணங்கள் தலயாத்திரைகளாக வளர்ச்சி கண்டு விளங்கின.

யாத்திரை என்ற சொல்லானது "யா" என்ற எழுத்திலிருந்து பிறந்ததாகும். இச்சொல்லானது போவது, பிரயாணம் செய்தல், தெய்வத்தையோ,

புண்ணியத்தையோ நாடி கோயிலுக்கோ மற்ற தலம், தீர்த்தம் முதலியவற்றுக்கோ தனியாகவோ, கூட்டமாகவோ மக்கள் செல்வது எனப் பொருள்படுகிறது. மேலும் யாத்திரைகளானவை தலயாத்திரை, தீர்த்த யாத்திரை, பாதயாத்திரை, இரதயாத்திரை என்று பல வகைப்படுகின்றன.

ஆன்மீக வாழ்க்கையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் தலங்களை நோக்கியதாக தமது பயணங்களை மேற்கொண்டிருந்தனர். நீண்ட பயணங்களை மேற்கொண்டு வெகு தொலைவிலுள்ள திருக் கோயில்களுக்குச் சென்று கோவிலைச் சுற்றி வந்து அங்குள்ள தெய்வ விக்கிரகங்களையும், தலவிருட்சம், தீர்த்தங்களையும் வணங்கிவிட்டு, காணிக்கைகளையும் செலுத்தி விட்டு வருதலென்பது மகிழ்ச்சி தரும் அனுபவமாகும். இச் செயற்பாடுகள் ஆன்மீக வாழ்க்கையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்களின் சிறப்பான பணியாக அமையப் பெற்றுள்ளது.

தல யாத்திரைகளைப் பொறுத்தவரையில், அதனை மேற்கொள்பவரின் நம்பிக்கை, அவர்கள் அந்த இலக்கினை அடைந்தவுடன் பெறும் மகிழ்ச்சி, கூட்டமாகச் சேர்ந்து செயற்படும் மனப் பக்குவம் ஒருமித்த முடிவு, ஒருங்கிணைந்த செயற்பாடு, வழியில் ஏற்படும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதல், தலங்களைக் கண்டவுடன் அவர்கள் பெறும் மனநிறைவு ஆகியவை மிகவும் சிறப்புடையனவாகக் காணப்படுகின்றன.

பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து நவீன முறையிலான போக்குவரத்துச் சாதனங்கள் புழக்கத்தில் வரும் காலம் வரை மக்களின் நடமாட்டமும், தூரத்திலுள்ள பிரதேசங்களுக்கிடையில் போக்குவரத்துக்களும் ஏற்படுவதற்குத் தலயாத்திரைகளே பெரிதும் காரணமாயிருந்தன. இவை பெரு நாட்களிலும், திருவிழாக்காலங்களிலும் மக்கள் பல்லாயிரக் கணக்கில் திருத்தலங்களுக்குப் போகும் வழக்கத்தினையும் மேம்படுத்தியிருந்தன.

## சம்பந்தர் காலப் பின்னணி

"அந்த இருண்ட காலப் பகுதியில் தமிழகத்தில் மாபெரும் அரசியல், சமய, மொழி மாறுதல்கள் தோன்றித் தமிழரின் வாழ்வையும், நாகரிகத்தையும்

பல புதிய திருப்பங்களுக்கு உட்படுத்தின" என்று K.K.பிள்ளையவர்கள், சங்கமருவிய காலம் பற்றிக் குறிப்பிட்டுள்ளமையானது, பல்லவர் காலத்திற்கு முன்பிருந்த காலச்சூழலை தெளிவு படுத்துவதாயுள்ளது. தமிழக வரலாற்றில் கி.பி 2ம் நூற்றாண்டு தொடங்கி கி.பி 7ம் நூற்றாண்டின் முற்பகுதி வரை சமண, பௌத்த சமயங்களின் மேலாதிக்கம் காணப்பட்டிருந்ததாகும்.

களப்பிரர் ஆட்சியிலும், பின்னர் 6ம் நூற்றாண்டளவிலும், பல்லவர் மற்றும் முற்காலப் பாண்டியர் ஆட்சிக் காலங்களிலும் தமிழகத்தில் சமண சமயம் மிகுந்த செல்வாக்கினைப் பெற்றிருந்தது. ஆட்சியதிகாரத்துவம் மிக்க மதமாக சமணமே விளங்கியது. ஆதலால் பெரும்பாலான மக்களும் அந்நெறி நின்று ஒழுகினர். அச் சமயங்கள் பாலி மற்றும் பிராகிருத மொழிகளில் தாம் சார்ந்த சமய தத்துவங்களை விளக்கின. உயிர்க் கொலைகளையும், வேள்விகளையும் எதிர்த்தன. உயிரிரக்கம், அறம், மனித நேயம் என்பவற்றை வலியுறுத்தின. அதே நேரத்தில் கடுமையான துறவறம், உண்ணா நோன்பு, நுண்கலைகள் எதிர்ப்பு, பெண்களை மதியாத போக்கு என்பவற்றை வலியுறுத்தின.[3]

இத்தகையதொரு காலச் சூழலில் புறச் சமயங்களுக்கு மாற்றாக வைதீக சமயங்களை வளர்த்தெடுக்க வேண்டிய தேவையும் அவசியமும் பக்தியியக்கச் செயற்பாட்டாளர்களிடம் தோன்றியிருந்தது. அச்சமயங்கள் வற்புறுத்திய கொள்கைகளுக்கு மாற்றாக இல்லறம் பேணல், நுண்கலைகள் யாவும் இறையின்பத்தை ஏற்படுத்தி, இறையுணர்வைத் தூண்டி வீடு பேற்றிற்குத் துணை புரியும் என்பதனை வலியறுத்திப் பேசுதல், தமிழை வளம்படுத்தல், அதன் மூலம் பக்தி, சமயம், மற்றும் தத்துவங்களை விளக்குதல் என்பவற்றுக்கு மக்களை ஒருங்கிணைந்து செயற்பட வைப்பதென்பது பக்தி இயக்கத்தினரின் இன்றியமையாத கடமையாகவும் அமைந்திருந்தது. மேற்கூறிய மாற்றத்திற்காக பக்தி இயக்கத்தை தலைமையேற்று வழிநடத்திய ஒருவராக சம்பந்தர் சைவ உலகில் போற்றப்படுகிறார்.

திருஞான சம்பந்தருடைய காலம் குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகளுண்டு. பெரும்பாலான அறிஞர்களின் கருத்தினடிப்படையில்

சம்பந்தரின் காலம் கி.பி 7ம் நூற்றாண்டு எனக் கொள்ள முடிகிறது. இவரது பாடல்கள் தேவாரங்கள் என சைவ பக்தி உலகில் வழங்கப்பட்டு வருகின்றன. பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளும் இவரால் பாடப்பட்டனவாகும். இதில் மொத்தமாக 384 பதிகங்கள் உள்ளன. அவற்றுள் திருத்தலப் பதிகங்களின் எண்ணிக்கை 377 ஆகும். பொதுத் திருப்பதிகங்கள் 7 ஆகும். இவர் 220 சிவத்தலங்களைப் போற்றிப் பாடியுள்ளார்.[4]

சம்பந்தரின் பதிகங்கள் ஊரக வரலாற்றினையும், மக்களின் வழக்குகளையும் பதிவு செய்து வைத்துள்ளது. திருஞான சம்பந்தர் ஒரு தலத்தைப் பற்றிப்பாடும் போது, அக்காலத்தில் அப்போது நிலவிய மக்கள் வாழ்க்கைமுறை, பொருளியல் நடவடிக்கை, மக்கள் வழக்கு, இயற்கை வழங்கிய சிறப்புக்கள், இறைவன் இறைவியரின் திருக்கோலச் சிறப்பு, அருளாற்றற் சிறப்பு, வழிபாட்டு முறைகள், தலத்தின் எழிலார்ந்த சிறப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்கிப் பாடியுள்ளார்.

எடுத்துக்காட்டாக, திரு ஈங்கோய் மலைப் பகுதியில் குறிஞ்சி வாழ்க்கையையும், திருவண்ணாமலைப் பதிகத்தில் மருத வாழ்க்கையையும் பாடியுள்ளார். அவ்வாறே இப் பதிகத்தில் காவிரியிலிருந்து பிரிந்து சென்ற நீர்ப்பாசனக் கால்வாய்களைப் பற்றிப் பாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.[5]

இவ்வாறாக அவற்றைப் பாடிய முறைக்கும், இயற்கைத் தன்மைகளை வெளிப்படுத்தக் கையாண்ட வியூக முறைகளுக்கும், பாடிய சந்தர்ப்பத்திற்கும் அவருக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது யாதெனில், அவரால் ஊர் ஊராக மேற்கொள்ளப்பட்ட தலயாத்திரைகளே எனலாம்.

## சம்பந்தரின் தல யாத்திரை முறை

திருஞான சம்பந்தரின் தலயாத்திரையானது பதின்மூன்று ஆண்டுகளாக இடம்பெற்றிருந்தது. அவர் சைவசமய மறுமலர்ச்சிக்காக யாத்திரை செய்ய ஆரம்பித்த காலச் சூழலானது, அரச ஆதரவுடன் சமண சமயம் மேலெழுச்சி பெற்றிருந்த காலமாகும். பல்லவ மன்னர்களும் பெரும்பாலான மக்களும்

சமண நெறியினைப் பின்பற்றியொழுகினர். இவ்வாறான புறச் சமயச் சூழலில் அதுவும் பால்ய வயதிலேயே மிக்க ஆளுமையுடைய ஒருவராக சம்பந்தர் தனது பக்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க முயன்றிருக்கின்றார். வயது மட்டும் ஒருவருடைய ஆளுமையைத் தீர்மானிப்பதில்லை. மனப் பக்குவமும், இறைபற்றும், உறுதியான நம்பிக்கையும், திட்டப் பாங்கான செயற்பாடுகளுமே ஆளுமையின் ஊற்றிடங்களாக உள்ளன என்பதனை சம்பந்தரின் வாழ்வியலை அறிந்து கொள்பவர்கள் யாவரும் தெளிவாக விளங்கிக் கொள்வர். அதுமட்டுமன்றி இறைவன் துணையுடன் மதவாதிகளிடம் இருந்து வந்த எதிர்ப்புக்களை சம்பந்தர் மிகவும் சாதுரியமாக எதிர்கொண்டிருக்கின்றார் என்பதனையும் அவரது வாழ்வியலூடாக அறிந்துணர முடிகின்றது.

மூன்றாவது வயதில் தொடங்கிய அவரது தலயாத்திரைகள் பதினாறு வயதுவரை தொடர்ந்திருந்தது. நான்கு யாத்திரைகள் ஏழு வயதுக்குள் இடம் பெற்றிருந்தன. ஐந்தாவது தல யாத்திரை மிகவும் விசாலமானதாகச் சிறப்புப் பெற்றிருந்தது. இக்கட்ட யாத்திரையின் போது பல்வேறு பிரதேசத்துத் தலங்களை சென்று வழிபட்டு, அதிகளவில் பதிகங்களைப் பாடியுள்ளார். இக் காலத்தில் 218 பதிகங்களைப் பாடியதாக அறிய முடிகிறது. சைவ சமய வரலாற்றுப் போக்கில் பல மாற்றங்களை ஏற்படுத்திய ஒரு பயணமாகவும் இக் காலகட்ட யாத்திரை அமைந்திருந்தது. ஆறாவது யாத்திரையை தனது பதின்நான்காவது வயதிலேயே ஆரம்பித்திருக்கிறாரெனில் ஐந்தாம் கட்ட யாத்திரையானது ஏழு ஆண்டுகளாக நீட்சி பெற்றிருந்ததெனக் கொள்ள முடிகிறது.

ஊரின் எல்லைக்கு வெளியே திருக்கோயில் கண்களுக்குத் தெரியும் வரை இள வயதில் தந்தையின் தோள் மீதமர்ந்தும், பின்னர் பல்லக்கிலும் சென்றுள்ளார். கோயில் தென்பட்டதும் நடந்து சென்று திருக்கோவிலை வலம் வந்து உள்ளே சென்று வழிபட்டுப் பதிகம் பாடியுள்ளார். நான்காம் கட்ட யாத்திரையோடு தந்தையார் சீர்காழியில் இருக்க அடியவர் கூட்டத்தோடு தல யாத்திரையை மேற்கொண்டிருந்தார். தீருநீலகண்ட யாழ்ப்பாணர், மதங்க சூளாமணி, திருநாவுக்கரசுநாயனார், முருகநாயனார், சிறுத்தொண்டர்

முதலிய நாயன்மார்களுடன் சேர்ந்தும் அவரது பயணங்கள் இடம் பெற்றன. திருநாவுக்கரசருடன் இணைந்து சம்பந்தர் மேற்கொண்ட திருத்தலங்களை நோக்கிய பயணங்கள் வரலாற்று முக்கியத்துவ முடையனவாகக் காணப்படுகின்றன.

அரச ஆதரவு மிகுந்த சமண சமயச் சூழலிலேயே சம்பந்தரின் தலயாத்திரைகள் தொடர்ந்திருந்தன. போக்குவரத்து வசதிகள், ஒழுங்கான வீதிப் புனரமைப்புகள், போதியளவு தங்குமிட வசதிகள், அன்ன சத்திரங்கள் இல்லாத காலச் சூழலில் மக்களினுடைய ஆதரவினை மட்டும் நம்பியே இவர் இந்தத் தல யாத்திரைகளை முன்னெடுத்திருந்தார். இந்த வகையில் சம்பந்தரின் தலயாத்திரை முறைமைகள் அமைந்திருந்தமை காணத்தக்கதாகும்.

## சம்பந்தரும் தலயாத்திரைகளும்

சம்பந்தர் தமது காலச்சூழலில் மேற்கொண்ட சைவ பக்தி இயக்கப்பணியை முதன்மைப்படுத்தி மக்கள் சக்தியைக் கட்டியெழுப்பவும், பிற சமயத்தவரின் கருத்துக்களை நிராகரணம் செய்து, தாம் சார்ந்த சமயக் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதற்காகவும் ஊர்கள் தோறும் அமைந்துள்ள திருத்தலங்களை நோக்கிப் புனிதப் பயணங்களை மேற்கொண்டிருந்தார். இத்தகைய பயணங்களானவை சைவ சமய வளம்படுத்தலுக்கான அணுகுமுறையாகவும், பிரசார முறையாகவும் அமைந்திருந்தன.

திருஞான சம்பந்தர் இறைவனால் பிரமபுரத்தேரிக்கரையில் ஆட்கொள்ளப்பட்டது முதற்கொண்டு இறைவனைப் போற்றிப் பாடுவதற்காக தலயாத்திரைகளை மேற்கொள்வதனை வழக்கமாக்கிக் கொண்டார். இவரது இத்தகைய செயற்பாடுகளுக்கு அவர் சார்ந்த சமுதாயத்தினரோ-பெற்றோரோ காரணமாக இருந்திருக்கவில்லை. யாரும் அவர்களை இவ்வாறு செய்யத் தூண்டியவர்களுமல்லர். அவ்வாறெனின், இவருக்கு இத்தகைய ஞானம் எங்கிருந்து வந்தது? ஞானம் என்பது இரு வகைப்படும். ஒன்று இறையருளால் தாமாக வருவது. மற்றையது நாமாக முயன்று பெறுவது. இங்கு சம்பந்தருக்கு முதல் நிலை ஞானமே கிடைக்கப் பெற்றது. இந்த

ஞானம் ஞான வடிவினளாகிய அன்னையின் பாலை உண்ட மாத்திரத்தில் கிடைக்கப் பெற்றது. இதற்கு இறைவனின் ஆணை இருந்தது. இறைவனின் அருளினால் இச் செயல்கள் நடந்தன, என்பதை சம்பந்தரே குறிப்பிட்டிருக்கக் காணலாம். இவ்வாறு ஞானப் பாலுண்டதனைத் தொடர்ந்து தலங்களை நோக்கித் தொடர்ந்த புனிதப் பயணங்களானவை அவரது இறுதிக் காலம் வரை அவரால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

ஒவ்வொரு செயலுக்கும், தொழிலுக்கும் நோக்கங்கள் பலவுண்டு. அவ் வகையிலேயே சமயம்சார் பெரியோர்கள் மேற்கொண்ட யாத்திரைகளும் நோக்கம் கருதியனவாகவே அமைகின்றன. சம்பந்தரும் தமது நோக்கத்தை நிறைவு செய்வதற்கு திட்டப்பாங்கான ஒரு பிரசார முறைமையாகவே தல யாத்திரைகளை முன்னெடுத்திருந்தார். இத்தகைய பயணங்களை புத்தி பூர்வமாக செயற்படுத்தியதன் விளைவாக சமூக மாந்தரிடையே தாம் சார்ந்த சைவக் கொள்கைகளைப் பல நிலைகளிலும் அவரால் பரப்பிக் கொள்ள முடிந்தது.

சைவம் சார் கொள்கைகளை அறிந்து கொள்வதற்கான வடமொழித் தேர்ச்சியும், அவற்றைச் சமூகத்தில் எடுத்துப் பேசுவதற்குரித்தான தமிழறிவும், மற்றும் இசைப் புலமையும் என பல்வேறுபட்ட ஆளுமைகளைக் கொண்டிருந்த சம்பந்தர் அவற்றை வெளிப்படுத்துவதற்கு தலங்களை மைய நிலையங்களாகவும் கொண்டிருந்தார். சமூகத்தின் இருப்பு நிலையென்பது அது வாழும் சமூகத்தில் தங்கியுள்ளது. இதனை அன்றே உணர்ந்திருந்த சம்பந்தர் தலங்கள் தோறும் யாத்திரைகளை மேற்கொண்டிருந்தார். ஏனெனில் திருக்கோயில்கள் சமய சின்னங்களாகவும், சமுதாய நிறுவனங்களாகவும் நகரவளர்ச்சித் தளங்களாகவும் விளங்கியமையினால் சம்பந்தரது பயணங்களும் தலங்களை நோக்கியதாக மையங்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பந்தர் சைவநெறியினைத் தழைத்தோங்கச் செய்வதன் பொருட்டு பதின்மூன்றாண்டுகளாக தலயாத்திரைகளை மேற்கொண்டிருந்தார். அவ் வகையில் தலங்களை நோக்கிய அவரது பயணங்களை ஆறு கட்டங்களாகப் பகுத்தாராய முடிகிறது.

முதல் யாத்திரை — சீர்காழியில் இருந்து புறப்பட்டுத் திருக்கோலக்கா சென்று மீண்டும் சீர்காழிக்குத் திரும்பியமை. திருக்கோலக்காத் தலத்தில் தனது கரங்களால் தாளமிசைத்து,

*"மடையில் வாளை பாய மாதரார்*
*குடையும் பொய்கைக் கோலக் காவுளான்*
*சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங் கீழ்*
*உடையும் கொண்ட உருவம் என்கொலோ"*[6]

என்ற பதிகம் பாடினார். இதன் விளைவாகவே அவருக்கு இறைவனால் பொற்றாளம் வழங்கப்பட்டது. இறைவி அதற்கு ஓசை கொடுத்தருளினார். யாத்திரையின் தொடக்கமே சம்பந்தருக்கு இறைவனின் ஆணையும் துணையும் கிடைக்கப்பெற்றிருந்தமையினை உணர முடிகிறது.

இரண்டாவது தல யாத்திரை — சீர்காழியிலிருந்து ஆரம்பமாகிய இவரது இரண்டாம் கட்ட யாத்திரையானது நனிபள்ளி, தலைச் சங்காடு, வலம்புரம், காவிரிப்பூம் பட்டினம், சாய்க்காடு, திருவெண்காடு, திருமுல்லைவாயில், சிரபுரம் முதலிய தலங்களைச் சென்று வழிபட்டு பதிகம் பாடி மீண்டும் சீர்காழியைச் சென்றடைவதாக அமைந்திருந்தது.[7] ஒவ்வொரு தலயாத்திரைகளும் சைவ சமயச் செந்நெறியில் பல மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பினும் இரண்டாம் கட்ட யாத்திரையானது முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தமையைக் காணலாம். திரு நனிபள்ளி, திருவெண்காடு ஆகிய திருத்தல யாத்திரைகள் பின்னைய நாட்களில் சம்பந்தருக்குச் சிறப்பையளிக்கும் பயணங்களாக அமைந்திருந்தன.

மூன்றாவது தலயாத்திரை சீர்காழியில் இருந்து தான் சம்பந்தரின் இக்கட்ட யாத்திரையும் ஆரம்பமானது. திருக்குருகாவூர், மயேந்திர பள்ளி, திருவெள்ளடை, திருக்கலிக்காமூர் ஆகிய திருத்தலங்களுக்குச் சென்று இறைவனை வணங்கி பதிகங்களைப் பாடியதன் பின்னர் மீண்டும் சீர்காழி வந்து தங்கியிருந்தார். இக் காலத்தில் திருநீல கண்ட யாழ்ப்பாணரும், அவருடைய துணைவியார் மதங்கசூளாமணி

அம்மையாரும் திருஞானசம்பந்தப்பிள்ளையாரை வணங்குவதற்குச் சீர்காழி வந்தனர்.[8]

நான்காவது தல யாத்திரை — சீர்காழியிலிருந்து திருத்தில்லையை நோக்கியதாக இவரது நான்காம் கட்டத் தலயாத்திரை அமையப் பெற்றிருந்தது. இந்த யாத்திரையில் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் சம்பந்தருடன் சென்றிருந்தார். தில்லைக்கூத்தன் பாதம் பணிந்து வழிபட்டதன் பின்பு பல தலங்களை நோக்கி அடியவர்களோடு பயணமானார். இவ் வகையில் திரு வேட்களம், திருக்கழிப் பாலை, திருநெல்வாயில் அரத்துறை, திருவெருக்கத்தம்புலியூர், திருமுதுகுன்றம், பழுவூர், திருப்பெண்ணாகடம், விசய மங்கை, திருவைகா, திருப்புறம்பியம், சேய்ஞலூர், வாழ்கொளி, புத்தூர், திருக்கடம்பூர், திருநாரையூர், திருக்கறிப்பறியலூர் முதலிய தலங்களைப் பணிந்து வழிபட்டு பதிகங்கள் பாடி, சீர்காழிக்கு மீண்டார்.[9]

ஐந்தாவது தல யாத்திரை — சம்பந்தரது ஐந்தாவது தல யாத்திரையும் சீர்காழியிலிருந்தே ஆரம்பமாகின்றது. இக்கட்ட யாத்திரையின் போது, சோழ நாடு, கொங்கு நாடு, பாண்டிய நாடு ஆகிய இடங்களில் உள்ள தலங்கள் தோறும் சென்று பதிகங்கள் பலவற்றைப் பாடியுள்ளார். திருக்கண்ணார், புள்ளிருக்கு வேளீர், திருப்பாச்சிலாச்சிரமம், திருச்செங்காடு (கொடிமாடச் செங்குன்றூர்) திருநின்றியூர், திருநீடூர், திருப்புன்கூர், திருப்பழ மண்ணிக்கரை, திருமணஞ்சேரி, திருவெதிர் கொள்பாடி, திருவேள்விக்குடி, திருத்துருத்தி, திருக்கோடிகா, திருக்கஞ்சனூர், திருமாந்துறை, திருமங்கலக்குடி, திருவியலூர், திருந்து தேவன் குடி, திருவின்னம்பர், வடகுரங்காடு துறை, திருப்பழனம், திருவையாறு, திருப்பெரும்புலியூர், திருநெய்த்தானம், திருமழபாடி, திருக்கானூர், திருவன்பிலாந்துறை, திருவட மாந்துறை, திருச்சிராப்பள்ளி, திருவலஞ்சுளி, பழையாறை, திருச்சக்தி முற்றம், பட்டீச்சுரம், திருவாவடுதுறை, திருத்தருமபுரம், திருச்செங்காட்டங்குடி, திருமருகல், திருப்புகலூர், திருவாரூர், திருக்கடவூர், திருஆக்கூர், திருவீழிமிழலை, திருமறைக்காடு (வேதாரண்யம்) திருவாய்மூர், திருக்குற்றாலம், திருநெல்வேலி, இராமேசுவரம், திருத்தெளிச் சேரி, திருக்கடவூர், திருப்பூந்துருத்தி என்ற தலங்களை நோக்கியதாக அவரது தல யாத்திரை விரிவு கண்டிருந்தது.[10]

இராமேஸ்வரத்தில் நின்று கொண்டு இலங்கையின் கிழக்கிலும், மேற்கிலும் அமைந்திருக்கின்ற புராதன சிவத் தலங்களான திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆகிய திருத்தலங்களை மனதினால் வணங்கிப் பதிகம் பாடினார். இலங்கையிலே பாடல் பெற்ற சிறப்புக்குரியதாக மேற்கூறிய திருத்தலங்கள் காணப்படுவதனால் இலங்கையிலுள்ள பெரும்பான்மையான இந்துக்களால் வழிபடப்பட்டுவரும் தலங்களாகவும், புனிதப் பயணங்களை மேற்கொள்வதற்குரிய புனித இடங்களாகவும், வரலாற்றுத் தொன்மையுடைய தலங்களாகவும் அவை விளங்கி வருகின்றன.

ஆறாவது தல யாத்திரை – சம்பந்தரின் பதின்நான்காவது வயதிலே ஆறாவது தலயாத்திரை தொடங்கப் பெற்றது. திருவோத்தூர், திருமாகறல், திருக்குரங்கணின் முட்டம், காஞ்சிபுரம், திருக்காளத்தி, திருவேற்காடு, ஒன்றியூர், மயிலாப்பூர், திருவான்மியூர், திருக்கழுக்குன்றம், திருமேற்றளி, திருக்கச்சி, நெறிக்கரைக்காடு, திருவாலங்காடு, திருப்பாசூர், திருவெண்பாக்கம், திருக்காரிகரை என்ற தலங்களை நோக்கியவாறு சம்பந்தரின் இத்தல யாத்திரை அமையப் பெற்றிருந்தது. இதுவே அவரது இறுதிக்கட்ட யாத்திரையாகவும் அமைந்தது. தனது 16 ஆம் வயதில் திருமணமும், சோதியில் கலத்தலுமாகிய நிகழ்வு இடம் பெறும் வரை அவரது திருத்தல யாத்திரைப் பணி தொடருற்று விளங்கியது.

## பல்லவர் கால சைவசமய மறுமலர்ச்சியில் சம்பந்தரது தலயாத்திரையின் செல்வாக்கு

ஒவ்வொரு செயலுக்கும், தொழிலுக்கும் நோக்கங்கள் இருப்பது போல அவற்றின் விளைவுகளும் நிறையவே உண்டு. பிற சமயச் சூழலில் தோன்றி வாழ்ந்து, சைவத்தையும், தமிழையும் வளர்க்க அரும்பாடுபட்ட பக்தியியக்கத் தலைமையாளர்களில் ஒருவரான சம்பந்தர் மேற்கொண்ட தலயாத்திரைகள் ஏலவே கூறப்பட்டது போன்று ஆறு கட்டங்களாகவும் அதே வேளை சீர்காழியை மையப்படுத்தியதாகவும் அமையப் பெற்றிருந்தன. தலங்களை நோக்கியதான அவரது புனிதப் பயணங்கள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு

வகையில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தது. இறைவனின் துணையுடனே அத்தகைய மாற்றங்களை அவரால் செய்ய முடிந்தது. இத்தகையதான மாற்றங்கள் அக்கால மற்றும் பிற்கால சைவ நெறியில் தாக்கங்களை ஏற்படுத்தியதோடு, பின்னைய நாட்களில் தல யாத்திரையின் அவசியத்தையும் உணர்த்தலாயிற்று.

இவ்வுலகியலில் பிறப்பெடுத்து நல்வினையாற்றி வீடுபேறு பெற வேண்டிய தேவையில்லாத ஜீவன் முத்தர் தாமென்பதனை சம்பந்தரே குறிப்பிட்டிருக்கின்றார். இத்தகைய ஒருவர் இம் மண்ணின் மேல் பிறப்பிக்கப்பட்டதற்குக் காரணம் யாது? இத்தகைய ஒருவர் ஊர்ஊராகச் சென்று இறைவனை ஏன் வணங்க வேண்டும்? அவ்வூரில் உறையும் இறைவனைக் காணவேண்டும்? என்ற சிந்தனையில் இறங்கிய சேக்கிழாருக்கு அந்த உண்மை புலப்படலாயிற்று. சம்பந்தர் ஊர்கள் தோறும் செல்வதற்குக் காரணம் யாதெனில் பல்லிடங்களிலும் வாழும் மக்கள் இவரை நாடிச் சீர்காழிக்கு வருதலென்பது இயலாத காரியம். எனவே சீர்காழித் தலைவர் மக்களை நாடி அவர்கள் இருக்குமிடம் தேடிச் சென்றார் என்ற உண்மை புலப்பட சேக்கிழார் தமக்கேயுரிய முறையில் இதற்கு விளக்கம் தருகிறார்.[11]

மானிடவியல், வரலாற்றியல், சமூகவியல், கலையியல், சமயவியல், மெய்யியல், அறிவியல் மற்றும் அறவியல் ஆய்வாளர்களுக்கு தகுந்த தடயங்களைத் தந்து நிற்கும் சான்றாதாரங்களாக, சம்பந்தரின் பாடல்கள் அமைந்து விளங்குகின்றன. இத்தகையதான கூறுகளைத் தமது பதிகங்களில் தரையிறக்கம் செய்வதற்கு அவரது தலப் பயணங்களும், அங்கு அவர் நேரடியாகக் கண்ட அனுபவ நிலைக் காட்சிகளும் உதவியிருக்கலாம் எனக் கொள்ள முடியும்.

சம்பந்தரின் ஆறு கட்டத் திருத்தல யாத்திரைகளும் அக் கால சமுதாயத் தளத்திலும், சமய நிலையிலும் செல்வாக்குச் செலுத்தியிருந்தன. முதலாவது திருத்தல யாத்திரையே சம்பந்தருக்கு சமூக அங்கீகாரத்தை வழங்கியது. திருக்கோலக்காவில் கையால் தாளமிசைத்துப் பாடும் போது இறைவனால்

பொற்றாளம் வழங்கப் பெற்றமையும் இறைவியால் அதற்கு ஓசை கொடுக்கப் பெற்றதுமான நிகழ்வு இடம் பெற்றது.

அடுத்து, நனிபள்ளியூர் மக்களின் வேண்டுகோளின் படி தந்தையின் தோள்மீதமர்ந்து நனிபள்ளிக்குச் சம்பந்தர் பயணமானார். அங்கு இறைவன் மீது திருப்பதிகம் பாடினார். இத் திருப்பதிகத்தின் பாடல்கள் எல்லாவற்றிலும் முதல் இரண்டு அடிகளில் பாலைநிலத்தின் இயல்பும், பின்னிரண்டடிகளில் மருத நிலத்தினதும், நெய்தல் நிலத்தினதும் இயல்புகள் கூறப்பட்டிருக்கின்றன. சான்றாக,

*காரைகள் கூகை முல்லை களவாகை யீகை*
*படர் தொடரிகள் ளிகவினிச்*
*சூரைகள் பம்மி விம்மு சுடகாடமர்ந்த*
*சிவன் மேவு சோலை நகர்தான்*
*தேரைகள் ஆரைசாய மிதி கொள்ள*
*வாழை குதிகொள்ள வள்ளை துவழ*
*நாரைகளாரல் வாரவயன் மேதிவைகு*
*நனிபள்ளி போலு நமர்காள்.*[12]
*“மடை இடை வாளை பாய முகிழ் வாய் தெரிந்து*
*மணம் நாறும் நீலம் மலரும்*
*நடை உடை அன்னம் வைகும் புனலம் படப்பை நனிபள்ளி....”*[13]

*“வெறுமலர் தொட்டு விட்ட விசைபோன கொம்பில்*
*விடுபோது அலர்ந்த விரைசூழ் நறுமலர் அல்லி புல்லி ஒலி*
*வண்டு உறங்கும் நனிபள்ளி”*[14]

*“குளிர்தரு கொம்மலோடு குயில் பாடல் கேட்ட*
*பெடை வண்டு தானும் முரல நளிர்தரு சோலைமாலை நரை*
*குருகு வைகு....”*[15]

*“அகிலுந்தி யொண்பொன் இடறி*
*நாகமொ டாரம்வாரு புனல் வந்தலைக்கும்...”*[16]

*'நகை மலி முத்திலங்கு மணல் சூழ் கிடக்கை"*[17]

*"புறவிரி முல்லை மௌவல் குளிர்பிண்டி புன்னை*
*புனை கொன்றை துன்று பொதுளி நறவிரி போதுதாது புது*
*வாசம் நாறும் நனிபள்ளி"*[18]

என்றமைந்த இப் பாடல்கள் சுட்டத்தக்கவை. பாலை, நெய்தல், மருதம் ஆகிய நிலத்தினியல்புகள் இங்கு குறிப்பிடப்பட்டிருத்தலால், பாலை நிலமாக இருந்த திரு நனிபள்ளி நெய்தல் நிலமாக மாறும்படி சம்பந்தரால் பாடியருளப் பெற்றதென்ற வழக்கு நீண்ட காலமாக இருந்து வருகின்றது.[19] பயன்பாடற்றதோர் நிலத்தினை சம்பந்தர் தனதாளுமையால் செம்மையாக்கிப் பயன்பாட்டிற்குரியதாக மாற்றியமைத்திருக்கலாம். அதாவது மக்களுக்குப் பயன்படாத இயற்கைத் தன்மையைச் சம்பந்தர் இறையருளால் பாடிப் பயன்பெறும் நிலமாக மாற்றினார் என்றே இதனை உணர வேண்டும்.[20] இன்றைய காலத்தில் முல்லை நிலங்கள், மருத நிலங்கள் குடியேற்றப் பகுதிகளாக மாற்றியமைக்கப்படுவதும், நெய்தல் நிலங்கள் பயிர்ச் செய்கைக்குரிய நிலங்களாக மாற்றியமைக்கப்படுவதும் இவ்விடத்தில் ஒப்புநோக்கத்தக்கது. இதற்கும் ஒருவரது ஆணை அவசியமாகின்றது. அது தற்காலத்தில் ஆட்சியாளர்களின் ஆணையாகவே அமையப் பெறுகின்றது. சம்பந்தரும் பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கிப் பாடிய பதிகத்தின் 11ம் பாடலில்,

*"நனிபள்ளி உள்க வினை கெடுதல்*
*ஆணை நமதே"*

என்ற வகையில் ஆணையிட்டுப் பாடியிருக்கக் காணலாம்.

சம்பந்தரது இரண்டாவது தல யாத்திரையில் திருவெண்காட்டுத் திருத்தலமும் ஒன்றாகவிருந்தது. திருவெண்காடு பழைய சிவத்தலங்களில் ஒன்றாகும். சோமதீர்த்தம், அக்கினி தீர்த்தம், சூரிய தீர்த்தம் என்ற மூன்று தீர்த்தங்கள் அங்கு இருக்கின்றன. அம் மூன்றையும் 'முக்குளம்' என்றும் அங்குள்ள நீரை 'முக்குளத்து நீர்' என்றும் சொல்வார்கள். அவை மிக்க புனிதமானவை. இத் திருத்தலத்தைச் சம்பந்தர் சென்றடைந்தார்.

அங்கு இறைவனை வழிபட்டவர்களின் காண்பதற்கரிய செயல்களாலும், நிகழ்வுகளாலும், அடியவர் கூறும் அனுபவ வார்த்தைகளாலும் கவரப்பட்டார். பிள்ளையில்லை என்று வருந்திய தம்பதியர், மனைவிக்கு நீண்ட நாட்களாகப் பேய் பிடித்திருக்கிறதென்று கவலையுற்ற கணவன், பேயாடும் மகளிர், வறுமை நீங்கவில்லையே என்று கூறும் மக்கள் என்ற மனோநிலையில் பலரையும் அத் தலச் சூழலில் சம்பந்தர் கண்டுணர்ந்தார்.

*வெண் காட்டானென் றுள்ளாடி யுருகாதார்*
*உணர்வுடைமை யுணரோமோ* [21]

*"திருவெண் காட்டானென் றோதியவர்*
*யாது மொரு தீதிலரென் றுணருமினே* [22]

*வெண்காடு மேவிய அண்ணலை அடிதொழ*
*அல்லல் இல்லையே*[23]

என்று இறைவனின் பெருமையை நினைந்தின்புற்றார். அங்கே தாம் கண்டவற்றையும், கேட்டவற்றையும், அனுபவித்தவற்றையும் தம்பதிகத்திலே இணைத்துப் பாடியுள்ளார்.

*பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள நினை*
*வாயினவே வரம் பெறுவர் ஐயுற வேண்டா வொன்றும்*
*வேயனதோள் உமைபங்கன்வெண்காட்டு முக்குளநீர்*
*தோய்வினையா ரவர் தம்மைத்தோயாவாந் தீவினையே*[24]

என்று முக்குளநீரின் மகத்துவத்தையும், அத்தல வழிபாட்டின் சிறப்பினையும் எடுத்தியம்பியிருக்கிறார்.

இன்றைய மருத்துவவியலாளர்கள் மகப் பேறின்மைக்குக் காரணங்களாக மன அழுத்தம், வேலைப்பளு, அமைதியற்ற வாழ்வு, ஓய்வின்மை என்பனவற்றைக் குறிப்பிடுகின்றனர். சுற்றுலாப் பயணங்கள் இவற்றுக்குத்

தீர்வாகின்றதென ஆலோசனையையும் வழங்குகின்றனர். இதனை அன்றே உணர்ந்திருந்தவராகச் சம்பந்தர் விளங்கக் காணலாம். இதற்கு மெய்கண்ட தேவரது பிறப்பினைச் சான்றுபடுத்தலாம்.

திருவெண்காட்டு இறைவனின் திருப்பெயராகிய சுவேதனப் பெருமான் என்ற இளமைப் பெயரையுடையவர் மெய்கண்ட தேவர். அச்சுதகளப்பாளர் இவரது தந்தையாராவார். அச்சுதகளப்பாளரின் குலகுருவாக விளங்கியவர் அருணந்தி சிவாச்சாரியார் என்னும் சகலாகம பண்டிதர். அச்சுத களப்பாளருக்கு குழந்தைப் பேறின்மை என்பது மனக்குறையாக இருந்தது. இதனைத் தன் குருவிடம் எடுத்து விளக்கினார். அவர் உடனே தம்முடைய பாராயணத்திலுள்ள தேவாரத்தை எடுத்துக் கயிறு சார்த்திப் பார்த்த போது 'பேயடையா பிரிவெய்தும்' என்ற பதிகம் கிடைக்கப் பெற்றது. இதில்,

*"பிள்ளையினோடு உள்ள நினை*
*வாயினவே வரம் பெறுவர்"*

என்றிருப்பதனை கண்ணுற்ற அருணந்தி சிவாச்சாரியார், இறைவனை நினைந்து அதிசயித்து, திருவெண்காட்டிற்குச் சென்று முக்குளநீரில் நீராடிவழிபட்டு சில காலம் அங்கேயே தங்கியிருக்கும்படி அச்சுத களப்பாருக்கு ஆலோசனை வழங்கினார். அவ் ஆலோசனையின்படி செயற்பட்ட அச்சுதகளப்பாளருக்கு ஆண்மகவு பிறந்தது. அம்மகவே பின்னாட்களில் இந்திய மெய்யிலாளர்கள் போற்றுகின்ற மெய்கண்டதேவராவார். 12 சூத்திரங்களால் அமைந்த சிவஞான போதம் இவரது படைப்பேயாகும்.

சம்பந்தருடைய தல யாத்தரையின் பெறுமானங்களில் ஒன்றாகவே இந்நிகழ்வினைக் கருத முடிகிறது. இவ் வகையில் சம்பந்தரின் நேரடி அவதானிப்புகளுக்கும் அதன் குறிப்புக்களை பதிகத்தின் மூலம் வெளிப்படுத்திய தன்மைக்கும், பின்னாளில் மெய்கண்ட தேவர் என்னும் முதற் சந்தானசாரியாரின் பிறப்பிற்கும், ஒரு வகையில், சைவ சித்தாந்த செல் நெறியின் வளர்ச்சிக்கும் சம்பந்தரின் திருவெண்காட்டுத் தலப்பயணமே அடிப்படையாக அமைந்திருந்தது எனக் கூறிக் கொள்ள இயலும்.

சைவசமயச் சூழலிலே பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியதாக ஏழு ஆண்டுகள் நீடித்திருந்த அவரின் ஐந்தாம் கட்டத் திருத்தல யாத்திரையைக் குறிப்பிடலாம். சமணர்களோடு வாதம் செய்தமை, புத்தரை வாதில் வென்றமை, திருநாவுக்கரசு நாயனாருடன் சேர்ந்து திருத்தலப் பயணங்களை முன்னெடுத்திருந்தமை, வாசி தீரக் காசு நல்கியமை, ஆலயச்சூழலை நோக்கி மக்களை அதிகளவில் ஈர்த்தமை ஆலயச் சூழலை மையமாகக் கொண்டு அற்புதங்களை நிகழ்த்தியமை, மக்களுக்கு நம்பிக்கைத் தன்மையை ஊட்டியமை, திருமறைக்காடு ஆலயத்தின் திருக்கதவு அடைக்கப் பாடியமை, சமுதாயத்தில் உள்ள மக்களிடம் உணர்வு மேலிடப் பெற்றவராக அற்புதங்களூடாக சமுதாயத் தளத்தில் காணப்பட்ட குறைகளைப் போக்கியமை என்றவாறாக அக்காலச் சைவ சமய நிலையில் மாற்றங்கள் பலவற்றை ஏற்படுத்தியிருந்தார். இத்தகைய செயற்பாடுகள் பிறரிடத்திலே சம்பந்தர் பற்றிய நல்ல பிரதிமையை உண்டு பண்ணியது. சமூகத்தில் அங்கீகாரத்தை வலுப்படுத்தியது.

பாண்டிநாட்டு யாத்திரை அப்பரது சொல்லையும் மீறியதாக அமைந்திருந்தது. இதனாலேயே அரசியலுக்கூடாகச் சமய நிலையில் மாற்றம் கண்ட பெருஞ்செயல் இடம் பெற்றது. பாண்டியன் சிவநெறியை விட்டு சமணர் வசப்பட்டான். மக்கள் பலரும் அச் சமயம் சார்ந்தனர். சிவனுறையும் கோவில்கள் பள்ளிகளாகவும், பாழிகளாகவும் மாற்றப்பட்டன. இந் நிலையில், அரசமாதேவியாரின் அழைப்பிற்கிணங்கி, பாண்டிநாடு சென்று மன்னனை மனம் மாற்றி சைவத்தின்பால் செயற்பட வைத்ததுடன் சமணர்களுடனும் வாதங்களைப் புரிந்து சைவத்தின் இருப்பினைத் தக்க வைத்தார்.

தேவாரங்கள் ஊரக வரலாற்றினையும், ஒவ்வொரு ஊர்களிலும் அல்லது வட்டாரத்திலும் காணப்பட்ட தொன்மங்களையும் பதிவு செய்து வைத்துள்ளது. திருஞான சம்பந்தர், யாத்திரைகளின் மூலம் தாம் சென்ற சிவத்தலங்களின் வரலாற்றினைப் பதிவு செய்யும் வகையில் பாடல்களைப் பாடியுள்ளார். அவ் வகையில் திருத்தல வர்ணனை, திருத்தலச் சிறப்பு, திருத்தல வழிபாட்டுச் சிறப்பு, அவற்றின் பயன் என்பன பாடல்களின் உட்கிடக்கைகளாக உள்ளன. இத்தகைய தொன்மங்களே பிற்பட்ட காலங்களில் விரிவான தல புராணங்கள்

உருவாகி, சமயம், மெய்யியல், கலை மற்றும் ஒழுக்கம் ஆகிய மரபுகளை விளக்க அடிப்படையாக விளங்கின.

பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் கோயில்களை அடிப்படையாகக் கொண்ட சமுதாய மாற்றங்கள் பல தமிழகத்திலே ஏற்பட்டன. அதாவது கோயில்கள் அமைப்பிலே மிகப் பெரியனவாகி நகரங்களின் வளர்ச்சிக்கு வழிவகுத்தன. கோயில்களை மையமாகக் கொண்டு நகரங்கள் வளர்ச்சியடைவதற்கு தேவாரமுதலிகளே காரண புருஷர்களாக அமைந்திருந்தனர். தல யாத்திரைகளும் சைவர்களின் சமய வாழ்க்கையில் ஒரு பிரதான இடத்தைப் பெறத் தொடங்கின. பின்னாளில் இத்தகைய மாற்றத்திற்கு சம்பந்தரால் மேற்கொள்ளப்பட்ட தலயாத்திரைகளும், அவரது பாடல் பதிவுகளுமே அடிப்படையாக விளங்கின எனலாம்.

இந்துக்கள் உருவாக்கிய சமய நிறுவனங்களில் பிரதான இடத்தை வகிப்பன திருக்கோயில்களாகும். இத் திருக்கோயில்களைப் போற்றித் திருஞான சம்பந்தர் பாடிய திருத்தலப் பதிகங்கள் 377 ஆகும். பாடல் பெற்ற திருத்தலங்களாகையால் அத் தலங்கள் சைவ மரபிலே மென்மேலும் சிறப்பெய்தித் திருத்தலங்கள் எனக் கொள்ளப்பட்டன. இத்தகைய சிறப்புடைய திருத்தலங்களானவை கலை வளர்க்கும் அரங்குகளாக, கலைஞர்களின் இருப்பிடங்களாக, பாடசாலைகளாக, மருத்துவ நிலையங்களாக, நீதிமன்றங்களாக, வங்கிகளாக பக்தி மையங்களாக விளங்கி சைவ மரபு நீட்சியடையப் பணியாற்றின.

சம்பந்தர் தனது பதிகங்களிலே இயற்கை வளம், சுற்றுச் சூழல் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தார். இயற்கையின் எழிலிலே இறைவனைக் கண்டு அந்த எழிலையும் வாயாரப் பாடும் தமிழ் விரகர் சம்பந்தராதலின் தலங்களின் வளப்பத்தைச் சொற்சித்திரமாகத் தீட்டுகின்றார். சான்றாக சோழ நாட்டில் கும்ப கோணத்துக்கு அருகிலுள்ள திருவைகாவூர் இயற்கைக் காட்சியை,

*"தாழை இள நீர் முதலிய காய்கமுகின்*
*வீழ நீரை தாறு சிதறி*

*வழையுதிர் வீழ் கனிகள் ஊறிவயல்*

*சேறு செய்யும் வைகாவிலே"*[25]

என்று வர்ணித்திருக்கின்றமையைக் குறிப்பிடலாம்.

சைவ நாயன்மார்கள் நால்வரில் இயற்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த ஒருவராக சம்பந்தர் முதனிலை பெறுகின்றார். அவரது பதிகங்கள் பலவற்றில் பாடல்களின் இரண்டு அல்லது மூன்று அடிகள் இயற்கையைப் பாடுவதை அவதானிக்க முடியும். சம்பந்தரின் இவ்வாறான இயற்கை ஈடுபாட்டுக்குப் பொதுவாக அவரது இளமைப் பருவத்தின் இயற்கையை இரசிக்கும் குதூகல மனப்பாங்கையே பலரும் பொதுவாக காரணம் காட்டுவதுண்டு.[26] ஆனால் அதற்கும் மேலாக அவர் மக்களின் உள்ளங்களை நிறைவிப்பதற்கான ஒரு உளவியல் உத்தி முறையாக இந்த வர்ணனை முறைமையைக் கொண்டிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு.[27] தாம் முதன் முதலில் ஆட்கொள்ளப்பட்ட சூழல் இயற்கை சூழ்ந்த திருத்தலமாகையால் அதனைத் தனது வாழ்நாளில் தொடர முற்பட்டிருக்கலாமெனவும் எண்ண இடமுண்டு. பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் மேற்கூறிய ஊகத்தின் வழி நின்று விளக்கம் தந்துள்ளார்.

"தம் பிரதேசத்தைப் பற்றிப் பிறர் புகழத்தாம் கேட்டு மகிழ்தல் என்னும் மன நிலையையே பயன்படுத்தித் தம் காரியத்தைச் சாதிக்கச் சம்பந்தர் முயல்கிறார் போலத் தெரிகிறது. பிற்போக்கான பிரதேசங்களில் போக்குவரவு வசதிகள் குறைந்த பகுதிகளில் ஆங்காங்கு குடியிருக்கும் மக்களிடையில் பிரதேச உணர்ச்சி மிகுந்து காணப்படும். சம்பந்தர் தமிழ் நாடு முழுவதும் சுற்றுப் பிரயாணஞ் செய்தவராதலால், இவ்வாறுள்ள பிரதேசங்கள் பலவற்றைக் கண்டிருப்பார். இவ்வாறான பிரதேசங்களைக் குறித்து, உள்ளது விரித்தும், இல்லது புணர்த்தியும் அப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களிடம் கூறினால் அவர்கள் அகம் மிக மகிழ்ந்து எப்பெரிய காரியத்தையும் செய்ய முனைந்து நிற்றலை இன்றுங் காணலாம். பிரதேச உணர்ச்சியைப் பயன்படுத்திச் சைவசமய மறுமலர்ச்சியில் மக்களை முன்னின்று உழைக்கச் செய்யும் சம்பந்தர் இந்த முறையைக் கையாண்டிருக்கிறார் போலத் தெரிகிறது."[28]

சம்பந்தருடைய தலயாத்திரையின் தலைமைத்துவ ஆளுமை என்ற அம்சத்தை கருத்தொன்றி நோக்கும் போது பேராசிரியரின் இந்த ஊகம் பொருத்தமான ஒன்றாகவே தெரிகிறது.

## முடிவுரை

திருஞான சம்பந்தர் கண்ணுற்ற திருத்தலக்காட்சிகள் பலவாகும். இவ்வாறு நேரடியாகக் கண்ணுற்று அனுபவம் பெறுவதற்கு அவருக்கு தல யாத்திரைகளே அடிப்படையாக அமையப் பெற்றிருந்தது. தமிழ் நாட்டில் தேவார காலத்திற்கு முன்பே சிவாலயங்கள் இருந்து வந்தன. அடியார்கள் அவ்வவ் ஊர்களில் இருந்து ஆலய வழிபாடு செய்து வந்தார்கள். ஆரம்பகாலம் முதற்கொண்டே தமிழர்களுக்கு கடவுளுணர்வும், கடவுளின் மீது அன்புணர்வும் இருந்து வருகின்றன. இவை தேவார காலத்தின் பின் அதிக முனைப்புடன் வீறுகொண்டெழுந்தன. இதற்குச் சம்பந்தர் உள்ளிட்ட தேவார முதலிகளின் தல மையச் செயற்பாடுகள் உந்து சக்தியாக அமைந்தன. சம்பந்தரின் திருத்தல யாத்திரைகள் சீர்காழியை மையப்படுத்தியதாகவும், பல்லிடங்களை நோக்கியதாகவும் விரிவு பெற்றிருந்தது. சம்பந்தரின் இத்தகைய திட்டப்பாங்கான அணுகுமுறையும், பிரசார முறைமையும் ஆலய வழிபாட்டினூடாக பல மாற்றங்களையும், புது வடிவிலான நிகழ்ச்சிகளையும் வழங்கியிருந்தன.

திருஞான சம்பந்தர் தல யாத்திரைகள் மூலமாக சிவத் தலங்கள் அனைத்தையும் கண்டு சிவானுபவம் பெற்ற நிலையில் அவற்றைத் தம் திருப்பதிகங்களில் வெளிப்படுத்தியுள்ளார். அவர் பாடியருளியனவாக இன்று நமக்குக் கிடைக்கும் திருப்பதிகங்களோடு தொடர்புடைய தலங்கள் அனைத்தையும் நாம், சோழ நாட்டில் காவிரிக்கு வட கரையிலுள்ள தலங்கள், காவிரிக்கு தென் கரையிலுள்ள தலங்கள், ஈழநாட்டுத் தலங்கள், பாண்டி நாட்டுத் தலங்கள், நடு நாட்டுத் தலங்கள், தொண்டை நாட்டுத் தலங்கள், துளுவ நாட்டுத் தலங்கள், வட நாட்டுத் தலங்கள் என வகைப்படுத்தி வரையறை செய்து நோக்க முடிகிறது.[29]

ஒரு தலத்தைப் பற்றிக் கூறும் போது அத் தலத்தின் இயல்பான வரலாறு, ஆலயச் சிறப்பு, தலம் தொடர்பான புராண நிகழ்ச்சிகள், அத் தலத்தில் இறைவன் ஏதோ ஒரு கோலம் தாங்கி அடியவரை ஆட்கொண்டருளிய நிகழ்ச்சி, காலத்தில் நிகழ்ந்த அற்புதச் செயல்கள், தீர்த்தச் சிறப்பு, தலவிருட்ச மகிமை, ஆலயத்தில் வழி வழியாக இடம் பெற்று வரும் சிறப்பு விழாக்கள், வழிபாடுகள் என இவையனைத்தையும் சம்பந்தர் பதிகங்களில் தெளிவாகக் காணமுடிகின்றன.[30] இவ்வுத்திகளின் மூலம் ஒரு தலத்தின் மீது மக்களுக்கு அதீத ஈடுபாட்டினை ஏற்படுத்திய ஒருவராக சம்பந்தர் திகழ்கிறார்.

ஒரு சுற்றுலாவின் போது இயற்கையின் அதிசயங்களைப் பார்த்து இரசிக்கும் மனோநிலை நம்மில் பலருக்குண்டு. மலைகள், ஆறுகள், மலர்கள், அருவிகள், வான் தொடும் சிகரங்கள், விலங்கினங்கள், பட்சிகள், மரங்கள், புல்லினங்கள் என்றவாறாக இயற்கையிறந்த அதிசயங்களைக் கண்டு வியக்கின்றோம். இயற்கையின் இத்தகைய அம்சங்களை சம்பந்தர் தனது பாடல்களிலே பொருத்தமுறக் கையாண்டுள்ளார். அத்தகைய வெளிப்படுத்தல்களானவை பிறர் ஒவ்வொரு தலங்களுக்குச் செல்வதற்கும் தூண்டுதலாக அமைந்து விடுகின்றன. பிற்காலத்தவர் சுற்றுலா மையங்களாகத் தலங்களைத் தெரிவு செய்வதற்கும் அவை முன்னோடிச் சிந்தனைகளாக அமைந்துள்ளன.

ஆகவே, தமிழர் மரபில் சங்க காலம் தொடங்கிச் சம்பந்தருக்கு முன்பு வரை இப்படி ஊர் ஊராகச் சென்று இசை பாடி நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய நிகழ்ச்சி நடைபெறவில்லை எனத் துணிந்து கூறிக்கொள்ள இயலும். சம்பந்தரே இந் நிகழ்ச்சியை தூரநோக்குச் சிந்தனையுடன் முதல் முறையாக முன்னெடுத்தவர் எனவும் கொள்ள முடியும். இதன் பின்பே சைவ ஆலயங்கள் மக்களின் ஈர்ப்பு மையங்களாக விளங்கத் தொடங்கின. ஆலய வழிபாட்டு முறைமைகள் விரிவு பெற்றன. இந்து நுண்கலைக் கூறுகள் ஆலயங்களூடாக வளர்ச்சி கண்டன. திருக் கோயில்களை ஆதாரமாகக் கொண்டு நகரங்கள் வளர்ச்சி பெற்றன. திருக் கோயிலின் கட்டிட அமைப்புக்களானவை குகைக் கோயில், ரதக் கோயில்கள், கற்றளிக் கோயில்கள், என்ற வடிவங்களில் பரிமாண வளர்ச்சி பெற்று

விளங்கின. பின் நாட்களில் கோயில்களை அடிப்படையாகக் கொண்டு சமுதாய மாற்றங்கள் பலவும் தமிழகத்தில் ஏற்பட்டன. தல யாத்திரைகளும் சைவர்களின் வாழ்வியலில் பிரதான இடத்தைப் பெறத் தொடங்கின. சமய உணர்வினையும், அறிவினையும் மக்கள் பெறுவதற்கு கோயில்களே மூலங்களாகவும் அமைந்துள்ளன. இவ்வாறு சம்பந்தர் பல்லவர் கால புறச் சமயச் சூழலிலிருந்து மேற்கொண்டிருந்த திருத்தல யாத்திரைகளானவை அக்கால மற்றும் பிற்கால சைவசமய மாற்றங்களுக்கு உறுதுணையாக அமைந்து விளங்கியிருக்கின்றதெனலாம்.

## அடிக்குறிப்புக்கள்

1. பெரிய புராணம் - 1904
2. வில்கின்ஸ்.ஜே.டபிள்யூ., தமிழில் ச.சரவணன், (2009), *நவீன இந்துத்துவம்,* சந்தியா பதிப்பகம், சென்னை. ப.88.
3. வேங்கட்ராமன்.சு.,(2007), *இந்திய இலக்கியச் சிற்பிகள் திருஞானசம்பந்தர்,* சாகித்ய அகாதெமி, ப.11.
4. இரத்தின சபாபதி.வை.டாக்டர், (1982) *திருஞானசம்பந்தர் ஓர் ஆய்வு - முதற்தொகுதி,* டாக்டர்.எஸ்., இராதாகிருஷ்ணன் மெய்யுணர்வு மேல்நிலைக்கல்வி நிறுவனம், சென்னைப் பல்கலைக்கழகம். ப.X.
5. சமூக விஞ்ஞானம், (ஏப்ரல் - மே - ஜூன் 2012) காலாண்டு ஆய்விதழ், இதழ் - 35, ஜானி ஜான் கான் சாலை இராயப் பேட்டை, சென்னை. ப.13.
6. *திருஞானசம்பந்தர் தேவாரம்,* 23.1
7. சிங்கார வேலன் சொ.(1969) *திருஞானசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும்,* தேவாரத் திறனாய்வும், கழக வெளியீடு. ப.7.
8. மே.கு.நூ - ப.8.
9. மே.கு.நூ - ப.11.
10. மே.கு.நூ - பக்.13 - 15.
11. ஞானசம்பந்தன்.அ.ச., (1999), *பெரியபுராணம் ஓர் ஆய்வு,* கங்கை புத்தக நிலையம், சென்னை. ப.177.
12. *திருஞானசம்பந்தர் தேவாரம்,* 220.1

13. *திருஞானசம்பந்தர் தேவாரம்,* 220.2

14. *திருஞானசம்பந்தர் தேவாரம்,* 220.3

15. *திருஞானசம்பந்தர் தேவாரம்,* 220.4

16. *திருஞானசம்பந்தர் தேவாரம்,* 220.6

17. *திருஞானசம்பந்தர் தேவாரம்,* 220.7

18. *திருஞானசம்பந்தர் தேவாரம்,* 220.9

19. சிங்காரவேலன்.சொ., மு.கு.நூ. ப.8.

20. வேங்கட்ராமன்.சு. மு.கு.நூ. ப.19.

21. *திருஞானசம்பந்தர் தேவாரம்,* 184.9

22. *திருஞானசம்பந்தர் தேவாரம்,* 184.10

23. *திருஞானசம்பந்தர் தேவாரம்,* 273.6

24. *திருஞானசம்பந்தர் தேவாரம்,* 184.2

25. *திருஞானசம்பந்தர் தேவாரம்,* 329.1

26. சுப்பிரமணியன்.நா., (2002), *நால்வர் வாழ்வும் வாக்கும்,* கலைஞன் பதிப்பகம், சென்னை, ப.102.

27. மே.கு.நூ - ப.102.

28. வேலுப்பிள்ளை.டாக்டர்.ஆ., (1985), *தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்,* மூன்றாம் பதிப்பு, பாரிபுத்தகப் பண்ணை, சென்னை. பக்.108 - 109.

29. சோமசுந்தரம். P.S., (2006), *சம்பந்தர் காட்டும் திருத்தலக் காட்சிகள்,* ஆர்.கே.எம். பப்ளிகேஷன், தியாகராயநகர், சென்னை - ப.14.

30. மே.கு.நூ - ப.14.